28th February 1969]

Leaflets prepared by students

*62 Q.—THIRU N. R. THIAGARAJAN: Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether the Police have confiscated the leaflets under print at the Madras Marson Press, prepared by the Madras students; and

(b) if so, the reason therefor.

மாணவர்களால் தயாரிக்கப்பட்ட துண்டுப் பிரசுரங்கள்

திரு. என். ஆர். தியாகராஜன்: மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை மாணவர்களால் தயாரித்த துண்டுப் பிரசுரம் சென்னை மார்சன் அச்சகத்தில் அச்சாகிக் கொண்டிருக்கும் பொழுது போலீசார் சென்று பறிமுதல் செய்தனரா?

(இ) ஆமெனில், அதற்குக் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: (அ) ஆம்.

(இ) இந்த அச்சகத்தினர் 1867-ம் ஆண்டு அச்சக புத்தகப் பதிவுச் சட்டத்தின் 3-வது பிரிவின் விதித்துறைகளை மீறியதால், இந்த வெளியீடுகள் கைப்பற்றப்பட்டன.

திரு. என். ஆர். தியாகராஜன்: தலைவர் அவர்களே, அப்படி மாணவர்கள் அச்சடித்த துண்டுப்பிரசுரங்கள் ஏதேனும் சர்க்காரைக் கவிழ்க்கும் நிலையிலோ அல்லது நாட்டின் அமைதிக்கு பங்கம் ஏற்படுத்தும் வகையிலோ புரட்சிப் பிரசுரமாக இருந்ததா? அதனால் அதைத் தடை செய்தார்களா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: பிரசுரம் செய்பவர்கள் அதை அச்சடிக்கும் அச்சகத்தின் பெயரை அதில் குறிப்பிடவேண்டும். பெயர் குறிப்பிடாமல் துண்டு அறிக்கை வெளியிடக் கூடாது. அதில் அச்சகத்தின் பெயர் இல்லை. அதைப் போலீசார் கண்டுபிடித்து அச்சடிக்கப்பட்ட துண்டுப் பிரசுரங்களைக் கைப்பற்றினார்கள்.

Swatantra Party Resolution

*63 Q.—THIRU N. R. THIAGARAJAN: Will the Hon. Chief Minister be pleased to state—

(a) whether any request was made to the Tamil Nadu Government during the Swatantra Party convention held at Madras in May and June 1968 to prevent the influence of the Communists from spreading in Tamil Nadu; and

(b) if so, the action taken thereon?